**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜனவரி–பிப்ரவரி 2024**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. இளங்கோவடிகளின் தந்தை பெயர் என்ன?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
3. நாண்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் யார்?
4. பஞ்சம் என்பதன் பொருள் யாது?
5. பூம்புகாரின் மற்றொரு பெயர் என்ன?
6. முத்தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படுவது எது?
7. இலக்கியச் சுவைகள் எத்தனை வகைப்பெறும்?
8. பாபிலோன் எந்த நாட்டில் இருக்கிறது?.
9. அழகு நிரந்தரமானது இல்லை என்று கூறியவர் யார்?
10. யாப்பின் உறுப்புகள் எத்தனை?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. தக்கார் தகவிலர் என்பது எதனால் காணப்படும்?
2. நான்மணிக்கடிகை பெயர்க்காரணம் கூறுக.
3. சிறுபஞ்சமூலம் பாயிரச் செய்யுளால் அறிய முடிவது யாது?
4. பாடாண் திணை என்றால் என்ன?
5. பாரதியாரின் முப்பெறும் படைப்புகள் யாவை?
6. சாளை இளந்திரையன் யாரை வழிகாட்டியாக கொண்டார்?

7. தம்பி அழுத கண்ணீர் ஆறு எவ்வாறு பாய்ந்தோடியது?
8. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
9. சீறாப்புராணம் எனப் பெயர் பெற்றது எது?
10. தமிழின் தனிச் சிறப்பு என்ன?
11. ஊரார் கூட்டம் நடத்தி என்ன முடிவு செய்தனர்?
12. அகண்ட காவிரி ஆறு எங்கு இளைத்து மெலிகிறது?
13. குற்றாலநாதர் கோயிலில் உள்ள தெய்வங்கள் யாவை?
14. பொருள்கோள் என்றால் என்ன?
15. மையீற்றுப் பண்புபெயர் புணர்ச்சி என்றால் என்ன?

**பகுதி – இ**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. வல்லினம் மிகும் இடங்களை எடுத்துகாட்டுடன் விளக்குக.
2. பிறிது மொழிதல் அணி எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. ஐந்தருவி குறித்து விளக்குக.
4. தமிழ் நாட்டின் சிறப்புகளாக பாவாணர் கூறுவன யாவை?
5. பறவைகள் பறப்பதற்கான காரணங்களை விளக்குக.
6. மரணத்துள் வாழ்வோம் செய்யுளின் கருத்தை விளக்குக.
7. பாரதியார் குறிப்பு வரைக.
8. காளமேகப் புலவர் குறிப்பு வரைக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

***Aswer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. தமிழ் மொழியின் சிறப்புகளாக பாவாணர் கூறுவன யாவை?
3. கண்ணதாசனின் இயேசு கிறித்து பாடலை விளக்குக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. வான ஊர்தி கதையைச் சுருக்க எழுதுக.
2. பாண்டியன் நெடுஞ்செழியனின் வீர வரலாற்றை விளக்க எழுதுக.
3. காவிரி ஆற்றின் பிறப்பு மற்றும் சிறப்புகளை விளக்குக.

.....